# உற்சாக வருமானம் தரும், ஒருங்கிணைந்த (இயற்கை) பண்ணையம்



காவிரி ஆற்றில் தண்ணீர் ஒடினாலும்,ஒடாவிட்டாலும் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர்,திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தைச் சேர்நத பெரும்பாலான விவசாயிகள்,நெல் சாகுபடி செய்வதில்தான் கவனம் காட்டுவார்கள். வெகு சிலர்தான் காய்கறி,பயறு வகை என மாற்றுப் பயிர்களைப் பற்றி யோசிப்பார்கள்.ஆர்வமுள்ளவர்கள் ஒரு படி மேலே போய்,இத்துடன் கால்நடைகளையும் இணைத்துக்கொண்டு லாபம் ஈட்டுவார்கள்.இத்தகைய வெகுசிலரில் ஒருவர்... நாகப்பட்டினம் மாவட்டம்,நாங்குடி கிராமத்தைச் சேர்ந்த ஜீவானந்தம். நெல்லோடு மட்டும் தனது விவசாயத்துக்கு அணை போட்டு விடாமல் ஆடு,கோழி,கறவை மாடு,மீன் என கால் நடைகளோடு காய்கறி சாகுபடியையும் இணைத்து ஒருங்கிணைந்த பண்ணையத்தை அமைத்திருப்பதோடு,நேரடி காய்கறி விற்பனையிலும் கலக்கி வருகிறார் ஜீவானந்தம்.

பனிரெண்டாவது படித்து முடித்தவுடனேயே விவசாயத்துக்கு வந்துவிட்டேன்.இப்போது பதினைந்து வருடம் ஆகிவிட்டது.பத்து வருடத்துக்கு முன்னர் பருத்திச் சாகுபடி பண்ணிக்கிட்டிருந்தப்போது,'வெங்கடேசன்' நிற ஓய்வுபெற்ற வேளாண்துறை அதிகாரியோட பழக்கம் கிடைத்தது.அவர்தான் பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக,இயற்கை முறையில காராமணி நடவு,வேப்பங்கொட்டைக் கரைசல்னு சொல்லிக் கொடுத்தார்.அந்த முறையில் பருத்தியில் நல்ல பலன் கிடைக்கவும்...அதையேதான் எல்லாப் பயிர்களுக்கும் பூச்சிக் கட்டுப்பாட்டுக்காக பயன்படுத்துகிறேன்.

இந்தப் பகுதியில் விவசாயம்னாலே நெல்தான்.அதனால் நானும் 25 ஏக்கரில் வருடத்துக்கு ஒரு போகம் நெல் சாகுபடி பண்ணிக்கிட்டு இருக்கிறேன்.இது தண்ணி தேங்கிற பகுதி என்பதால்,பெரும்பாலும் நெல்தான் சாகுபடி பண்ண முடியும். மழை இல்லாத காலங்களில் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணைக் கொட்டிக் கொட்டி இரண்டு ஏக்கரை மேட்டுப்பகுதியா மாற்றியிருக்கேன்.அதில்தான் 10 சென்டில் பாகல்,10 சென்டடில் புடலை,10 சென்டில் கொத்தவரை,50 சென்டில் கத்திரி,50 சென்டில் தக்காளி,50 சென்டில் மிளகாய்னு காய்கறிகளை சாகுபடி பண்றேன்.10 சென்டில் பசுமைக்குடில் அமைத்து காய்கறிகளுக்கான நாற்றையும் நானே தயார் பண்ணிக்கொள்கிறேன். இதுபோக,ஒண்ணரை ஏக்கர் குளத்தில் மீன் அரை ஏக்கர் குளத்தில் மீன் குஞ்சு வளர்ப்பு ஒரு ஏக்கரில் ஆடு,கோழி,மாடுனு தனித்தனியாக இருக்கிறது.

“99 -ம் வருடத்தில் மெஷின் நடவுக்காக நாற்று பரவி வைத்திருந்தேனா ஆனால் நாற்று முத்தியும் மெஷின் கிடைக்காமல் ரொம்ப கஷ்டமாகிவிட்டது.அதனால்,நானே ஆட்களை வைத்து கயிறு கட்டி வரிசை வரிசையாக நடவு செய்தேன். அதுல நல்ல மகசூல் கிடைத்தது.அதில் இருந்து அந்த முறையைத்தான் இன்னமும் கடைபிடிக்கிறேன். இந்த முறையில நடவு செய்யும் போது ஏக்கருக்கு 2,500 கிலோ நெல் கிடைக்கிறது.விதைநெல்லுக்காக அதைக் காய வைத்து சுத்தப்படுத்துகிறப்போது 1,800 கிலோ நெல் கிடைக்குது. விதைநெல் என்பதால், சந்தையில் வழக்கமாக நெல்லுக்கு கிடைக்கிற விலையைவிட கூடுதல் விலை கிடைக்கிறது. எல்லாச் செலவுகளும் போக, எப்படியும் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைத்துவிடும். 25 ஏக்கரில் நெல் மூலமாகவே வருடத்துக்கு, இரண்டரை லட்ச ரூபாய் வரை வருமானம் கிடைத்துவிடும். ஆனால், இதைவிட அதிகளவு வருமானம் இயற்கைக் காய்கறி சாகுபடி மூலமாக இரண்டு ஏக்கர்லேயே கிடைத்துவிடும்.

கத்திரி, மிளகாய், தக்காளி ஆகிய காய்களுக்கு நாற்று உற்பத்தி செய்துதான் நடவு செய்ய வேண்டும். பசுமைக்குடில் அமைத்து, குழித்தட்டுகளில் நாமே நாற்றுகளை உற்பத்தி செய்து கொள்ளலாம். இதற்கு வாய்ப்பில்லையெனில், நாற்றுகளை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். பெரும்பாலும் எல்லா வகையான காய்கறிகளையுமே ஆடிப் பட்டத்திலும், மார்கழிப்பட்டத்திலும் நடவு செய்யலாம். காய்கறிகளுக்கு வடிகால் வசதியுள்ள எல்லா வகை நிலங்களும் ஏற்றது. நடவுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் (ஆடிப்பட்ட நடவு என்றால் வைகாசி மாதத்தில்), ஏக்கருக்கு 10 கிலோ என்ற கணக்கில் தக்கைப் பூண்டு அல்லது சணப்பைத் தூவி விதைக்க வேண்டும். இவை இரண்டும் இல்லையென்றால், 6 கிலோ காராமணி விதை விதைக்கலாம்.

விதைத்த 40-ம் நாள் பூ எடுக்கத் தொடங்கும். பின் அப்படியே அவற்றை மடக்கி உழவு செய்ய வேண்டும். பின் ஏக்கருக்கு 5 டிராக்டர் என்ற கணக்கில் தொழுவுரத்தைக் கொட்டிக் கலைத்து,

குறுக்கு நெடுக்காக இரண்டு சால் டிராக்டர் உழவும், ஒரு சால் பவர் டில்லர் மூலம் உழவு செய்ய வேண்டும்.

அடுத்து, ஐந்து அடி இடைவெளியில் 50 சென்டி மீட்டருக்கு ஒரு நீர் சொட்டும் பகுதி என்ற அளவில், சொட்டு நீர்க்குழாய்களை அமைக்க வேண்டும். நீளவாக்கில் சொட்டு நீர்க்குழாய் அமையும் இடத்தில், நிலத்தில் ஒரு அடி அகலம், ஒரு அடி ஆழத்துக்கு வாய்க்கால்களை எடுத்து அதனுள்ள புங்கன் இலை, வேம்பு இலை, தொழுவுரம் ஆகியவற்றை கலந்து இட்டு மண்ணை நிரப்பி மூடவேண்டும். இந்த வாய்க்காலின் மையப் பகுதியில் சொட்டுநீர்க் குழாய் அமையுமாறுச் செய்ய வேண்டும். உங்கள் பகுதியில் இருக்கும் சந்தை வாய்ப்புக்கேற்றவாறு ஒவ்வொரு காய்க்கும் தேவையான அளவு நிலத்தைத் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

அப்படி பிரித்த நிலத்தில், தண்ணீர் சொட்டும் பகுதிக்கு இருபுறமும் ஒரு அடி இடைவெளியில் நான்கு விரல்கிடை அளவுக்கு குழிபறித்து, 50 கிராம் உயிர் உரக்கலவையை (பார்க்க பெட்டிச் செய்தி) வைத்து, ஒவ்வொரு குழியிலும் கத்திரி, மிளகாய், தக்காளி என தேவையான நாற்றுகளை நடவு செய்ய வெண்டும். வெண்டை, கொத்தவரை விதைகளை ஒரு குழிக்கு இரண்டு விதை வீதம் நேரடியாகவும் நடவு செய்யலாம். கொடி வகைப்பயிர்களாக இருந்தால், மூங்கில் கழிகளை ஊன்றி ’16 எம்.எம்’ இரும்புக் கம்பி மூலம் இணைத்துக் கட்டி ஃபிளாஸ்டிக்’ ஒயரால் பந்தல் பின்னிக்கொள்ள வேண்டும்.

பிறகு, ஊடுபயிராக அனைத்து காய்கறிகளுக்கிடையிலும் சொட்டு நீர்க்குழாய்க்கு அருகில் காராமணி விதைகளை விதைத்துவிட வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து மூன்று மதுல் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்தால் போதுமானது. நடவு செய்த 3-ம் நாளில் இருந்து அறுவடை முடியும் வரை, வாரம் ஒரு முறை ஏக்கருக்கு ஒரு லிட்டர் வீதம் சூடோமோனஸ், பாஜ்போ பாக்டீரியா.. போன்ற நுண்ணுயிர்கள் கலந்துள்ள திரவ வடிவ இயற்கை உரத்தைக் கலந்துவிட வேண்டும். ஹியூமிக் அமிலம், மண்புழு உரநீர் ஆகியவற்றைக்கூட

| இரண்டு ஏக்கரில் காய்கறி சாகுபடி செய்ய ஒரு வருடத்துக்கான செலவு - வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| உழவு | 3,900 | |
| விதை | 1,700 | |
| நடவு | 9,000 | |
| களை, மண் அணைக்க | 20,700 | |
| உயிர் உரங்கள் மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லிகள் | 15,115 | |
| பந்தல் அமைக்க | 3,500 | |
| பறிப்பு செலவு | 1,11,600 | |
| காய்கள் விற்பனை மூலம் வரவு | | 5,40,000 |
| **மொத்தம்** | **1,65,515** | **5,40,000** |
| **நிகர லாபம்** | | **3,74,785** |

இயற்கை உரத்துக்குப் பதிலாக அதே அளவில் கலந்து விடலாம். அல்லது இவை மூன்றையும் வாரம் ஒன்றாக மாற்றி மாற்றியும் கொடுக்கலாம். அறுவடை முடியும் வரை சொட்டு நீரில் கலந்தும் விடலாம்.

15, 30 மற்றும் 45-ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். மூன்றாவது களையெடுப்பின்போது, செடிகளுக்கு மண் அணைத்துவிட வேண்டும். கொடி வகைப்பயிர்களில் கொடி படர ஆரம்பிக்கும்போது... ககைளை ஊன்றி பந்தலில் படருமாறு ஏற்றிவிட வேண்டும். காராமணி இருப்பதால், காய்கறிச் செடிகளில் பெரும்பாலும் பூச்சித் தாக்குதல் இருக்காது. இருந்தாலும், ஆங்காங்கு மஞ்சள் பொறிகளையும் வைக்கலாம். (பழைய டால்டா டப்பாக்களில் மஞ்சள் வண்ணத்தைப் பூசி, அதன் மீது கிரீஸைத் தடவி ஆங்காங்கு கட்டைகளை ஊன்றி கவிழ்த்து வைத்துவிட வேண்டும். மஞ்சள் வண்ணத்தால் பூச்சிகள் கவரப்பட்டு, அருகில் வரும்போது கிரீஸில் ஒட்டிக் கொண்டு இறந்து விடும்). இதற்கு மேலும் பூச்சிகள் தாக்கினால், வேப்பங்கொட்டைக் கரைசலைத் தெளிக்கலாம். அவற்றுக்கும் கட்டுப்படா விட்டால் பாதிப்புக் கேற்ற அளவுக்கு இயற்கைப் பூச்சிக்கொல்லிகளைத் தேர்வு செய்து தெளிக்கலாம்.

கொத்தவரை 30-ம் நாளில் அறுவடைக்கு வரும். வாரம் ஒரு பறிப்பு வீதம் எட்டு பறிப்புகள் பாகல், புடலை ஆகியவை 60-ம் நாளில் பூவெடுக்க ஆரம்பித்து 70-ம் நாளில் இருந்து பறிப்புக்கு வரும். தினம் ஒரு பறிப்பு என 90 பறிப்புகள் வெண்டை 30-ம் நாளில் அறுவடைக்கு வரும். தினம் ஒரு பறிப்பு என 60 பிறப்புகள் கத்திரி 75-ம் நாளில் அறவுடைக்கும் வரும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் என மொத்தம் 135 பறிப்புகள் தக்காளி 90-ம் நாளில் அறுவடை தொடங்கி தினம் ஒரு பறிப்பு என 30 பறிப்புகள் மிளகாய் 75 ம் நாளில் அறுவடை தொடங்கி வாரம் ஒரு பறிப்பு என 18 பறிப்புகள் வரும். ஒரு காய் அறுவடை முடிந்தவுடன், அந்தச் செடிகளை அழித்துவிட்டு, சற்று தள்ளி அந்த

இடத்தில் வேறொரு வகை செடியை நடவு செய்து விட வேண்டும். இதேமாதிரி மாற்றி மாற்றி செய்து கொண்டிருந்தால், ஆண்டு முழுக்க தொடர்ந்து காய்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும்.
சாகுபடி பாடத்தை முடித்த ஜீவானந்தம் விற்பனை மற்றும் வருமானத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். நான் என்னோட இரண்டு, ஏக்கலேயும் விளைகிற காய்களை விற்பதற்காக அலையததேயில்லை. இயற்கை முறை விவசாயத்தில் விளைந்த காய்கறிங்கிறதால் உள்ளூர்க்காரங்களே வந்து வாங்கிக்கொள்வார்கள். தோட்டத்துலேயே எடை போட்டு வித்துவிட்டால். மிச்சமானாலோ அல்லது அதிக அறுவடை வந்தாலோதான் வெளிய அனுப்புவேன்.

சந்தையில் காய்கள் விற்கிற விலையைப் பற்றியும் கவலைப் படுவதேயில்லை. தக்காளி வெளிமார்க்கெட்டில் நாற்பது ரூபாய்க்கு விற்றாதாலும் கரி, ஐந்து ரூபாய்க்கு விற்றாதாலும் சரி நான் கிலோ எட்டு ரூபாய்னு ஒரே விலை நிர்ணயம் பண்ணி வைத்திருக்குகிறேன். என்னோட செலவுக் கணக்குகளுக்கு ஏற்ப நானே போட்டு வைத்திருக்கற விலை. அந்த விலைக்குதான் விற்பேன். அதேமாதிரிதான் மற்ற எல்லாக் காய்களுக்குமே கிலோ பத்து ரூபாய்னு நிர்ணயம் பண்ணி வைத்திருக்கேன். பாகற்க்காயை மட்டும் கிலோ 20 ரூபாய்னு விற்கிறேன். அதனால் என்கிடட எப்பவுமே காய்கள் மீதமாகுற தில்லை.

எப்பவுமே ஒரே மாதிரியான விலைக்கு கிடைக்கிறதால பக்கத்து ஊர்களில் இருக்கிற கடைக்காரங்ககூட நேரடியாக என்கிட்ட வந்து வாங்கிக்கொள்வார்கள். என்னோட வீட்டுலேயும் காய்கறி விற்பனை நடக்கும். அதை என்னோட மனைவி சுமதி கவனிச்சுக்குவாங்க. இரண்டரை ஏக்கரில் இருந்து தினமும் 200 கிலோ வரை காய்கள் கிடைக்கிற சராசரியாக ஒரு நாளைக்கு 2,000 ரூபாய் வருமானம் கிடைத்துவிடும். அதிகமாக மழை பெய்யுற காலங்களைத் தவிர மற்ற நாட்களில் எல்லாம் காய்கறிகள் கிடைத்துகொண்டே இருக்கும். எப்படியும் வருடத்துக்கு ஒன்பது மாசம் காய்கறிகள் மூலமாக தொடர்ந்து வருமானம் கிடைத்துக்கொண்டே இருக்கும்.
காய்கறித் தோட்டத்தை முழுசாக இயற்கைக்கு மாற்றிவிட்டேன். நெல் சாகுபடியை மட்டும்தான் முழுதாக இன்னமும் மாத்த முடியவில்லை. ஆனால் குறைவான அளவுதான் ரசாயன உரத்தைத்தான் பயன்படுத்திக்கிட்டிருக்கேன். கூடிய சீக்கிரம் அதையும் முழுதாக இயற்கைப் பக்கம் திருப்பிடவிடுவேன்.

**தொடர்புக்கு**

ஜீவானந்தம்
அலைபேசி: 94433-75262